# பஸ், மெட்ரோ ரெயில் மீண்டும் இயங்கின!

சென்னை, நவ.26–

நிவர் புயல் கரையைக் கடந்து சென்றதால் பேருந்து சேவை நிறுத்தி வைக்கப்பட்ட 7 மாவட்டங்களில் மீண்டும் மதியம் 12 மணி முதல் வழக்கம் போல் பேருந்துகள் இயங்கத் தொடங்கின. சென்னையில் மெட்ரோ ரெயிலும் மீண்டும் இயங்கின.

வங்கக்கடலில் உருவான நிவர் புயல் 25–ந் தேதி கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புயல் கரையைக் கடக்கும் கடலோர மாவட்டங்களில் 24–ந் தேதி மதியம் 1 மணி முதல் பேருந்துகள் இயக்கம் நிறுத்தப்பட்டது. அதன்படி நிவர் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 24–ந் தேதி மதியம் 1 மணி முதல் அரசுப் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டது.

புயல் கரையைக் கடந்து பாதுகாப்பான சூழல் உறுதிபடுத்தப்பட்ட பின்னர் பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்துக் கழகம் தெரிவித்தது. இந்தநிலையில் தற்போது நிவர் புயலானது 25–ந் தேதி (நேற்று) இரவு 11 மணி அளவில் மரக்காணம்–புதுச்சேரி இடையில் கரையைக் கடந்தது.

புயல் கரையைக் கடந்து விட்டதால் மேற்கூறிய மாவட்டங்களில் இன்று மதியம் நண்பகல் 12 மணி முதல் வழக்கம் போல அரசுப் பேருந்துகள் இயக்கப்படும் என்று அரசுப் போக்குவரத்துக் கழகம் அறிவித்ததை அடுத்து பேருந்துகள் இயக்கத் தொடங்கின.

அதே போல சென்னையில் மெட்ரோ ரெயில் சேவையும் மீண்டும் மதியம் 12 மணி முதல் துவங்கியது. விடுமுறை கால அட்டவணைப்படி மெட்ரோ ரெயில் இயக்கப்படும். அதன்படி 10 நிமிடத்துக்கு ஒரு ரெயில் இயக்கப்படும் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.